DEPOSITION OF WITNESS

Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, VANUR.

Calender - C.C.No.49/2016
Miscellaneous -

Sessions -

Deposition of witness for PW1

Name : Vadivel

Father Name /
Husband Name : Ranganathan

Village :

Taluk :

Caste : -

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of 19th May 2026

எதிரிகள் அனைவரும் ஆஜர்.

சாட்சி குவிமுச 311ன்கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யபப்டுகிறார்.

நான் கையொப்பமிட்ட புகாரை போலீசார் எழுதி கொடுத்தார்கள் என்றால் சரிதான். முதல் விசாரணையில் சொன்ன விவரங்களை போலிசார் சொல்லியதன்பேரில் நான் சொன்னேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக

சொல்லபப்டும் நான் மீண்டும் சென்று எனது செயினை தேடிப்பார்த்து எடுத்துக்கொண்டேன் என்றால் சரிதான்.

சம்பவம் தொடர்பாக காயம் பட்டு நான் மருத்துவமனைசென்று சிகிச்சை எதுவும் எடுத்துக்கொளள்வில்லை என்றால் சரிதான். ஆஜர் எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. போலீசார் கேட்டு கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அனுமதியளித்ததின் பேரில் தற்போது சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

ஆஜர் எதிரிகளோடு இவ்வழக்கில் சமாதானம் சென்றுவிட்டேன் என்றால் சரிதான். நான் கணம் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்து என்னுடைய 1 1/4 பவுன் தங்கசங்கிலியை இடைக்கால நிபந்தனையின் பேரில் பெற்றுசென்றேன். நான் மேற்படி தங்க சங்கிலியை விற்றுவிட்டேன். போலீசார் சொன்னதின் பேரில் சாட்சியமளிக்கவிலலை என்றாலும் நடந்த சம்பவத்தின்அடிப்படையில் முதல் விசாரணையில் சாட்சியம் அளித்தேன் என்றாலும் தற்போது ஆஜர் எதிரிகளோடு சமாதானமாக சென்றுவிட்டதால் குறுக்குவிசார்ணையின்போது முதல் விசாரணையில் சொன்ன விவரங்களுக்கு முற்றிலும் முரணபட்டு பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, VANUR.

Calender - C.C.No. 49/2016
Miscellaneous -

Sessions -

Deposition of witness for Prosecution PW 2(LW4)
Defence

Name : Manikandan

Father Name /
Husband Name : Ranganathan

Village :

Taluk :

Caste : -

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of 19th May 2026

எதிரிகள் அனைவரும் ஆஜர்.

சாட்சியை கோட்டக்குப்பம் காவல் நிலைய காவலர் திரு. திருப்புகழ் என்பவர் அடையாளம் காண்பிக்கப்பட்டார்.

**முதன்மை விசாரணை**

நான் அரியாங்குப்பத்தில் குடியிருந்து வருகிறேன். நான் பெயிண்டிங் வேலை செய்துவருகிறேன். அசா.1 எனது உடன்பிறந்த தம்பி ஆவார். வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அனுமதியளித்ததின் பேரில் தற்போது சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

29.12.2015 அன்று மாலை 04.00 மணிக்கு வடிவேலு தண்ணீர் எடுப்பதற்காக திரு.ரங்கா கம்பெனியில் தண்ணீர் எடுத்த பெரம்பை பங்களா மேடு வழீயாக சென்று கொண்டிருந்தபோது பிஔய்01 பிஇசட் 3306 என்ற ஸ்கூட்டி இருசக்கர வாகனத்தில் வந்த 4 நபர்கள் வடிவேலுவை வழிமறித்து அவரை அசிங்கமாக திட்டி அவர் கழுத்தில் இருந்த 1 1/4 கால் பவுன் தங்க சங்கிலியை பறித்து கொண்டு சென்றுவிட்டர்ர்கள் என்றும் போன் மூலம் தகவல் தெரிந்துகொண்டேன் என்று போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது அரசு தரப்பு எதிராக பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, VANUR.

Calender - C.C.No. 49/2016
Miscellaneous -

Sessions -

Deposition of witness for Prosecution PW3 (LW6)
Defence

Name : Murugan

Father Name /
Husband Name : VAradharaj

Village :

Taluk :

Caste : -

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of 19th May 2026

எதிரிகள் அனைவரும் ஆஜர்.

சாட்சியை கோட்டக்குப்பம் காவல் நிலைய காவலர் திரு. திருப்புகழ் என்பவர் அடையாளம் காண்பிக்கப்பட்டார்.

**முதண்மை விசாரணை**

நான் அரியாங்குப்பத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி செய்துவருகிறேன். பட்டியல் சாட்சி5 முருகனை தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம், 2 கைப்பற்றுதல் மகசர்களில் என்னுடைய கையொப்பம் 2வதாக உள்ளது. முதல் கையொப்பம் யாருடையது என்று எனக்க தெரியாது. மேற்படி கையொப்பத்தை சுமார் 10 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் காலை வேளையில் கோட்டக்குப்பம் காவல் நிலையம் அருகே இருசக்கர வாகனத்தில் நான் வந்து கொண்டிருந்தபோது அந்த இடத்தில் கோடடக்குப்பம் காவல் நிலைய போலீசார் என்னை நிறுத்தி வாகன சோதனை செய்து கையொப்பங்கள் கேடடதன் பேரில் கையொப்பம் செய்தேன். அவைகளில் எனன் எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் 2வதாக உள்ள கையொப்பம் **அசா.ஆ.2 மற்றம் 30.12.2015 11.00 மணி மற்றும் 11.30 மணிக்கு தயார் செய்யப்பட்ட கைப்பற்றுதல் மகசர்களில் 2வதாக உள்ள என் கையொப்பங்கள் முறையே அசா.ஆ-3 மற்றும் அசா.ஆ-4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அனுமதியளித்ததின் பேரில் தற்போது சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

ஆஜர் எதிரிகளை தெரியாது. **30.12.2015 அன்று** அன்று நானும் முருகனும் வாழப்பட்டாம்பாளையம் சர்ச் அருகே சென்று கொண்டிருந்தபோது கோட்டக்குப்பம காவல் நிலைய போலிசார் இவ்வழக்கின் எதிரிகளை விசாரித்து கொண்டிருந்தார்கள் என்றும் அதில் ராஜபிரியன் என்பவர் தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை என் முன்னிலையில் பதிவு செய்தார்கள் என்றும் அ்தன் அடிப்படையில் 11.00 மணிக்கு ராஜபிரியன் எடுத்து ஆஜர்படுத்திய 1 1/4 பவுன் தங்க செயின் மற்றம் 11.30 மணிக்கு எதிரி ராஜபிரியன் ஆஜர்படுத்திய பிஒய்01 பிஇசட் 0036

என்ற இருசக்கர வாகனத்தை கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினார்கள் என்றும் அவைகளில் நாங்கள் சாட்சி கையொப்பங்கள் செய்தோம் என்று போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது அரசு தரப்பு எதிராக பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

ஒம்/- XXXX,

நீதித்துறை நடுவர்,

வானூர்.